**அனுப்புநர்**

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பி.எச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள் மற்றும்
இணை இயக்குநர் (கல்வி),
பாண்டிச்சேரி.

**ந.க.எண். 022679 /H2/2020 நாள் : 15.09.2020.**

ஐயா / அம்மையீர் ,

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – செப்டம்பர் 2020, மேல்நிலை முதலாமாண்டு, இரண்டாமாண்டு மற்றும் இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ் துணைத் தேர்வு / தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வு / தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு – விடைத்தாட்கள் மற்றும் படிவங்கள் அனுப்புவது குறித்த சிறப்பு அறிவுரைகள் வழங்குதல் – சார்பாக.

*****

நடைபெறவுள்ள செப்டம்பர் 2020, மேல்நிலை முதலாமாண்டு, இரண்டாமாண்டு மற்றும் இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ் துணைத் தேர்வு / தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வு / தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு தொடர்பாக ஒவ்வொரு தேர்வு நாளன்றும் தேர்வு முடிந்த பின்னர் கீழ்க்காணும் ஆவணங்களை அதனெதிரே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைப்படி அனுப்பி வைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ. எண் | அனுப்பப்பட வேண்டிய ஆவணங்கள் | ஒப்படைக்கும் விபரம் |
|---|---|---|
| 1. | ஒவ்வொரு தேர்வு நாளன்றும் தேர்வு முடிவுற்ற பின்னர் விடைத்தாட்களை அறைவாரியாக விடைத்தாள் உறையில் இட்டு அனைத்து விடைத்தாள் அடங்கிய உறைகளையும் ஒன்றாக வைத்துக்கட்டி துணிப்பையில் வைத்துத் தைத்து அரக்கு முத்திரையிட்டு அனுப்பப்பட வேண்டும். | முதன்மைக் கல்வி அலுவலரின் ஆளுகைக்குட்பட்ட கல்வி மாவட்டத்தில் அமைந்துள்ள அந்தந்த தேர்வு மையங்களுக்கான வினாத்தாள் கட்டுக்காப்பு மைய வினாத்தாள் கட்டுக்காப்பாளரிடம் தேர்வு நடைபெற்ற அன்றைய தினமே உரிய விடைத்தாள் கட்டுக்களைத் தேர்வு மைய எண் / நாள் குறிப்பிட்டு, வழித்தட அலுவலர் மூலம் நேரில் ஒப்படைக்க வேண்டும்.<br>இத்துடன் இணைத்தனுப்பப்பட்டுள்ள படிவத்தின்படி மூன்று நகல்கள் தயார் செய்து, ஒன்றினை தேர்வு மையத்தில் பாதுகாப்பாக வைத்து, மற்ற இரு நகல்களை வினாத்தாள் கட்டுக்காப்பாளரிடம் மையத்தில் ஒப்படைக்க வேண்டும்.<br>வினாத்தாள் கட்டுக்காப்பாளர் உரிய விடைத்தாள் கட்டுக்களை கட்டுக்காப்பு மையத்தில் தனி அறையில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.<br>எக்காரணங் கொண்டும் வினாத்தாள் கட்டுக்கள் வைக்கப்பட்டுள்ள அறையில் வைக்கக்கூடாது. |
| 2. | வினாத்தாட்கள் (பத்து எண்ணிக்கையில்) (விடைத்தாள் அனுப்பப்படும் துணி உறையின் உள்ளேயே வைத்துக் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்). | |
| 3. | Absentees Top Sheet / Absentees Statement தனி உறையில் (Separate cloth cover Sealed) வைத்துக்கட்டி அனுப்பப்பட வேண்டும். | |
| 4. | CSD படிவங்கள் தனி துணி உறையில் (Separate cloth cover Sealed) வைத்துத் தைத்து முத்திரையிட்டு அனுப்பப்பட வேண்டும். | |

| வ. எண் | அனுப்பப்பட வேண்டிய ஆவணங்கள் | அனுப்ப வேண்டிய விபரம் |
|---|---|---|
| 5. | வருகை புரிந்த தேர்வர்களின் முகப்புச் சீட்டு "A Part". | தேர்வு மையத்திலேயே இருத்திக் கொள்ளப்பட வேண்டும். |
| 6. | தேர்வு முடிவுற்ற கடைசி நாளன்று Hall wise Attendance Sheet & Centre Nominal Roll. | சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். |

மேற்படி அறிவுரைகளைத் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்துத் தேர்வு மைய கண்காணிப்பாளர்களுக்கும், துறை அலுவலர்கள் / வழித்தட அலுவலர்கள் மற்றும் வினாத்தாள் கட்டுக்காப்பாளர்களுக்கும் தவறாது தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஒம்/–)
**இயக்குநர்**

**<u>இணைப்பு</u> :**

படிவம்

**<u>நகல்:-</u>**

1. அனைத்து தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்/ துறை அலுவலர்/வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள்/ வழித்தட அலுவலர்கள் (முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழியாக)
   – தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு).
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் – தகவலுக்காக.

**<u>குறிப்பு:-</u>**

எக்காரணத்தினை முன்னிட்டும் விடைத்தாள் கட்டுக்களை வினாத்தாள்கள் வைத்துள்ள அறையில் வைக்கக்கூடாது.